## டெல்லி – இமாச்சலப் பிரதேசம் – ஜம்மு – காஷ்மீர் – ஜார்க்கண்ட் – கர்நாடகா – கேரளா – பஞ்சாப் – மேற்கு வங்காளம் – தெலுங்கானா முதல்வர்களுக்கு கடிதம்!

# யு.ஜி.சி.யின் வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வலியுறுத்துவீர்!

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன.22–**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு சமீபத்தில் வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியதைப் போன்று, டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜம்மு – காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலுங்கானா மாநில சட்டமன்றங்களிலும் நிறைவேற்றிட வேண்டுமென்று கோரி அம்மாநில முதலமைச்சர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த 9-1-2025 அன்று பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென்றும், இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்தபட்ச வரைவு நெறிமுறைகள்-2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள்-2025 ஆகிய இரண்டு வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், மேற்படி தீர்மானம் போன்று டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலங்கானா சட்டமன்றப் பேரவைகளிலும் நிறைவேற்றி ஒன்றிய அரசை வலியுறுத்திட வேண்டுமென்று கோரி, அம்மாநில முதலமைச்சர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20-1-2025) கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில், பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனத்தில் மாநில அரசுகளின் பங்கைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வுகளை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் பல்கலைக் கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் குறித்து மாநில முதலமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென்று ஒன்றிய அரசை வலியுறுத்தி ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அனைத்து மாநிலங்களும் இதே போன்ற நிலைப்பாட்டை எடுப்பது அவசியம் என தான் உறுதியாக நம்புவதாகக் குறிப்பிட்டு, தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தைப் போன்று தங்களது மாநில சட்டமன்றங்களிலும் இதுதொடர்பாக தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று டெல்லி, இமாச்சல் பிரதேசம், ஜம்மு - காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலங்கானா முதலமைச்சர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளைத் தெளிவாக மீறும் செயல் என்றும், இது நமது பல்கலைக்கழகங்களின் சுயாட்சியில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அதிகாரத்தை மையப்படுத்தி, நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் ஒன்றிய அரசின் இந்த முயற்சிகளுக்கு எதிராக நாம் ஒற்றுமையாக நிற்பது மிகவும் முக்கியம் என அம்மாநில முதலமைச்சர்களை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, தனது இந்தக் கோரிக்கையை மேற்குறிப்பிட்ட மாநில முதலமைச்சர்களும் பரிசீலித்து, தங்களது மாநில சட்டமன்றங்களில் இதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று தனது கடிதத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை – பனி மூட்டம்!

# 22 சதவிகித ஈரப்பதத்துடன் நெல் கொள்முதல் செய்திட அனுமதி வழங்கிடுவீர்!

### ஒன்றிய அரசை வலியுறுத்தி – உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கடிதம்!

*சென்னை, ஜன.22-*

டெல்ட்டா மாவட்டங்களில் 17% ஈரப்பதத்துடன் நெல் கொள்முதல் செய்யப்படுவதை தொடர்மழை மற்றும் பனி மூட்டத்தின் காரணமாக 22% ஈரப்பதத்துடன் நெல் கொள்முதல் செய்திட அனுமதிக்கக் கோரி ஒன்றிய அரசுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கடிதம் எழுதியுள்ளார்.



தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 2002 2003 காரிஃப் பருவம் முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராக செயல்பட்டு ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக செப்டம்பர் மாதம் முதல் நாளிலிருந்து கொள்முதல் செய்தால் டெல்ட்டா விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி 2022- 2023 காரிஃப் சந்தைப் பருவத்திலிருந்து செப்டம்பர் முதல் நாளிலிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

01.09.2024 முதல் 17.01.2025 வரை 1349 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 80,634 விவசாயிகளிடமிருந்து 5,72,464 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 1378 கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கு எண்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், நாளது தேதி வரை ஒன்றிய அரசு அனுமதித்துள்ள 17% ஈரப்பதத்தில் தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு காலதாமதமாகத் தொடங்கியதாலும் தொடர்ச்சியாக வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதாலும் குறிப்பாக டெல்ட்டா மாவட்டங்களில் கடந்த ஒருவார காலமாக விட்டு விட்டு கன மழை பெய்துள்ளதாலும் அறுவடை செய்யும் நெல் மணிகள் அதிக ஈரப்பதத்தில் உள்ளதாலும் வானம் மேகமூட்டத்துடனும், தொடர்ந்து பனிப்பொழிவுடனும் உள்ளதால் விவசாயிகள் நெல்லினை உலர வைக்கச் சிரமப்படுவதால் அதிக ஈரப்பதத்தில் உள்ள நெல் மணிகளைக் கொள்முதல் செய்ய விவசாயிகள், விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தற்போது 17% ஈரப்பதத்தில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதைத் தளர்வு செய்து 22% ஈரப்பதம் வரை நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கக் கோரி ஒன்றிய அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது.

---

## ஜன. 28 அன்று நடைபெறுகிறது!

# நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 28.1.2025 - செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் - 'மாதா மாளிகை'யில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் - நெல்லை மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் மற்றும் பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : பிப். 6, 7 ஆகிய நாட்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்துக்கு வருகை!**

**மற்றும் - கழக ஆக்கப் பணிகள்.**

அமைச்சர் **கே.என்.நேரு**
**தலைமைக் கழக முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**

---

# கோவையில் உள்ள தமிழ்நாடு ஹோட்டலில் ஆய்வு !

### அமைச்சர் ராஜேந்திரன் மேற்கொண்டார்!

*கோவை, ஜன.22-*

தமிழ்நாடு ஹோட்டலில் உள்ள உணவகம், அறைகள் ஹோட்டலில் வழங்கப்படும் உணவின் தரத்தை ஆராய்ந்தார் மேலும் அங்கு உள்ள வசதிகளை குறித்தும் தேவைப்படும் வசதிகள் குறித்தும் கேட்டு அறிந்தார்.

ஆய்வின் போது, மாவட்ட கழக செயலாளர் நா.கார்த்திக் தொண்டாமுத்தூர் ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போட் ராஜேந்தர், துணைமேயர் வெற்றிச் செல்வன் வட்டக்கழக செயலாளர்கள் கே.இராமநாதன், எஸ்.போஸ், மாமன்ற உறுப்பினர் வித்யா இராமநாதன் மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர்,

தமிழ்நாடு ஹோட்டல் எப்படி பராமரிக்கப்படுகிறது ? என ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், உணவகம், அறைகள் எல்லா முறையாக பராமரிக்கப்படுகிறதா ? என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். இங்கு வரக் கூடிய வாடிக்கையாளர்களுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்கிறதா ? என்பது பற்றி ஆய்வு செய்து இருப்பதாக தெரிவித்தார். எல்லாற்றையும் நிவர்த்தி செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். அவுட்ஷோர்சிங் முறையில் தேவையான ஆட்களை எடுத்து இருப்பதாகவும், இருப்பவர்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகவும், இங்கு வரக் கூடிய வாடிக்கையாளர்களிடம் கனிவான உபசரிப்பு இருக்க வேண்டும், சுவையான உணவுகளை வழங்க வேண்டும் ஹோட்டலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு இருப்பதாக தெரிவித்தார். நிரந்தர பணியாளர்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என கூறினார் தொடர்ந்த குற்றாலத்தில் சாகச சுற்றுலா ஏற்படுத்துவது தொடர்பாகவும், சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் தொடர்பாகவும் சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

---

## அருப்புக்கோட்டை

# வழக்கறிஞர் க.முனீஸ்வரன் மறைவு!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ இரங்கல்!

*சென்னை, ஜன.22-*

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வரன் மறைவுற்ற செய்தி அறிந்து கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

விருதுநகர் தெற்கு மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வரன் நேற்று முன்தினம் (20.01.25) காலை அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் கழக சட்டத் துறையின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தெரிவித்துள்ளார்.

---



கடலூர் மாவட்டம், திருவந்திபுரம் தேவநாதசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (20.01.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் பரணிதரன், உதவி ஆணையர் சந்திரன், செயல் அலுவலர் வேங்கடகிருஷ்ணன் உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




வக்பு திருத்த மசோதா மீதான நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆலோசனைக் கூட்டம் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் (20.1.2025) நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா மற்றும் எம்.எம். அப்துல்லா ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.